විදුලිබල හා බලශක්ති අමාත්‍යාංශය

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

Ministry of Power and Energy



2021

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව (බලශක්ති අංශය)

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை (வலுசக்தி பிரிவு)

Annual Performance Report (Energy Section)

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை (வலுசக்தி பிரிவு) – 2021

இல. 80, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை
கொழும்பு 07
தொலைபேசி இல: 011 2370032/33
இணையத்தளம்: www.energymin

2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை (வலுசக்தி பிரிவு)
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு
செலவினத் தலைப்பு இல. 115

பொருடக்கம்

பக்கம

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு 01

1.1 அறிமுகம் 01
1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் 03
1.3 விசேட முன்னுரிமைகள் 04
1.4 அமைச்சின் பிரதான நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் 04
1.5 நிர்வாகக் கட்டமைப்பு 05
1.6 அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள் 06
1.7 வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களின் விபரங்கள் (ஏதாவது இருப்பின்) 06

அத்தியாயம் 02 – எதிர்கால முன்னோட்டம் மற்றும் செயலாற்றுகைகள் 07

2.1 அறிமுகம் 07
2.2 செயற்பாடுகள் 07
2.3 எதிர்கால நோக்கு 24
2.4 எதிர்கொள்ளப்பட்ட பிரதான சவால்கள் 26

அத்தியாயம் 03 – வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதியியல் செயலாற்றுகை 28

3.1 நிதிச் செயலாற்றுகைகளின் கூற்று 29
3.2 நிதி நிலைமைகளின் கூற்று 31
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 32
3.4 நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள் 34
3.5 வருமான சேகரிப்புக்களின் முன்னேற்றங்கள் 51
3.6 ஒதுக்கீடுகளின் பயன்பாட்டு முன்னேற்றங்கள் 51
3.7 நி.பி. 208 இன் படி செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் 52
3.8 அறிக்கையிடப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் செயலாற்றுகை 52
3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 52

அத்தியாயம் 04 – செலாற்றுகை சட்டிகள் 53

4.1 செயலாற்றுகை சட்டிகள் 53

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் பெயலாற்றுகை 54

அத்தியாயம் 06 – மனித வள விபரம் 55

6.1 பதவியணி முகாமைத்துவம் 55
6.2 நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு மனித வளத்தினால் ஏற்படும் மிகை அல்லது பற்றாக்குறைகளால் ஏற்படும் தாக்கங்கள் 56
6.3 மனித வள அபிவிருத்திகள் 56

அத்தியாயம் 07 – இணக்க அறிக்கை 57

அத்தியாயம் 01
நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்று சராம்சம்

1.1 அறிமுகம்

அனைத்து அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் விடயப்பரப்புக்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கி 2020.08.09 ஆம் திகதியிடப்பட்ட 2187/27 ஆம் இலக்கமிடப்பட்ட விசேட வாத்தமானி வெளியிடப்பட்டதுடன் இதன் அறிவித்தலின் அடிப்படையில் வலுக்தி அமைச்சு தாபிக்கப்பட்டதுடன் இதன் விடயப்பரப்பாக வலுசக்திக் கட்டுக்காப்பை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் எரிபொருள் இறக்குமதியைக் குறைத்துக் கொள்வதற்காக தேசிய ரீதியிலான தேவைகள் நிறைவுறும் வகையில் பெற்றோலியம் மற்றும் அனல்வாயு உள்ளிட்ட உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்தல், களஞ்சிய வசதிகளை விரிவாக்கல், விநியோக நடவடிக்கைகள் மற்றும் அரச தொழில்முயற்சிகளுக்குரிய நியமங்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக நடாத்திச் செல்லுதல் போன்ற விடயங்கள் இவ் அமைச்சுக்கு சாட்டப்பட்டுள்ளது.

கொள்கை வழிகாட்டி

“நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு” என்ற அரச கொள்கை வழிகாட்டலின் கீழ் அமைச்சானது, சக்தி வளப் பாதுகாப்பு மற்றும் தன்னிறைவுத் தன்மையை ஏற்படுத்துவதே இக் கொள்கையின் பிரதான மூலோபாயமாக காணப்படுகின்ற போதிலும் ஏனைய தேசிய கொள்கைகளும் அரசால் அமுல்படுத்தப்படும். இவற்றில், மின்சாரம், போக்குவரத்து, கைத்தொழிற்துறை மற்றும் உள்நாட்டு நுகர்வோருக்கு குறைந்த விலையில் சக்திவலுவை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம் போன்றனவும் இதன் பிரதான செயல்பாடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், அமைச்சின் கீழ் வரும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் மற்றும் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துதலும் இதனுள் அடங்கும்.

சட்ட நியமங்கள்

அமைச்சு மற்றம் இதன் கீழ் வரும் நிறுவனங்களும் பின்வரும் சட்ட நியமங்களின் கீழ் செயற்பட்டு வருகின்றன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC) 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இந் நிறுவனமானது பெற்றோலியப் பொருட்களை; இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், சுத்திகரித்தல், வழங்கல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு நாடு பூராகவும் எரிபொருளை தடையில்லாது வழங்குவதினை உறுதிசெய்கின்றது.

வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC) 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், சுத்திகரித்தல், வழங்கல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC) தனியுரிமையாக ஈடுபட்டுவந்தபோதிலும், பெற்றோலிய வளங்கள் (விசேட ஓதுக்கு) 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தகுதிவாய்த நபர்களும் இச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியும் என்ற

சரத்திற்கிணங்க லங்கா இந்தியன் ஒயில் கம்பனியும் (LIOC) இவ் வர்த்தகச் வெயற்பாடுகளில் சிறந்த போட்டியாளராக செயற்பட ஆரம்பித்தனர். இதற்கிணங்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தின் (CPC) கீழ் உள்ள விநியோக மற்றும் களஞ்சியச் செயற்பாடுகள் பிரிக்கப்பட்டதுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு (LIOC) விநியோக மற்றும் களஞ்சியச் செயற்பாடுகளை பொது வழங்குனர் என்ற வகையில் கம்பனிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) வழங்கிவருகின்றது. இதற்கிணங்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையத்தின் மூன்றில் இரண்டு (2/3) பங்கை கொண்டிருக்கும் அதேவேளை லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) மூன்றிலொரு (1/3) பங்கை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL)

மேல்நிலை பெற்றோலிய தொழிற்துறை தொடர்பான தேசிய கொள்கையை உருவாக்குவதல் மற்றும் இலங்கையின் நவீன புவியியல் மற்றும் பௌதீக புவியியல் முறையிலான அகழ்வுச் செயற்பாடுகள், அபிவிருத்திகள், உற்பத்திகள் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் ஊடாக உள்ளூர் பெற்றோலிய வளங்கலில் இருந்து அதிஉச்சளவிலான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்புக்களை தயாரிப்பதற்கும் 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 08 ஆம் திகதி இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை நிறுவப்பட்டது. இதற்கிணங்க, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட கீழ் நிலை பெற்றோலிய தொழிற்துறை செயற்பாடுகளுக்கு அதிகாரமளிக்கும் வகையில் பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை நிறுவப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு,பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் வலுசக்தி அமைச்சு

தொலைநோக்கு

"இலங்கையை ஆசியாவின் சக்திவலு கேந்திரமாக மாற்றுதல்"

பணிக்கூற்று

"பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்துவதன் ஊடாக சக்தி வளம் தொடர்பான கொள்கைகளை ஒழுங்கமைத்து சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத நிலைபேறான சக்தி வழங்கலை உறுதிப்படுத்துதல் மற்றும் புதிய உள்நாட்டு சக்தி வளங்களை முன்பிருந்த சக்தி வளத்துடன் ஒருங்கிணைத்தல் மற்றும் இறக்குமதிகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் போன்றவற்றின் மூலம் குறைந்த விலையில் சக்தி வளங்களை கிடைக்கக்கூடிய வழிகளை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் சக்தி வளத் தேவையினை பூர்த்திசெய்தல்"

குறிக்கோள்கள்

- 2050ஆம் ஆண்டாகும் போது காபன் அற்ற நாடாக பங்களிப்பு வழங்கும் முன்னணி நாடாக இலங்கையை மாற்றுதல்
- 2023ஆம் ஆண்டாகும் போது டீசல் மற்றும் பெற்றோலியத் தரங்களை EURO VI நியமத் தரங்களுக்கு தரமுயர்த்துதல்.
- 2030ஆம் ஆண்டாகும் போது உள்நாட்டு எண்ணெய் மற்றும் இயற்கை வாயு உற்பத்தியை உச்சப்படுத்தி இலங்கையை சக்தி வளத் துறையில் தன்னிறைவடைந்த நாடாக மாற்றுதல்.
- இயற்கை வாயுவுக்கான தேசியக் கொள்கையை உருவாக்குதல்.
- 2026ஆம் ஆண்டாகும் போது சுயமான செய்முறையின் ஊடாக நாட்டின் பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியை பூர்த்தி செய்தல்.
- எரிபொருளை வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்துவதினை உறுதி செய்வதோடு அதனை நாட்டிற்கு விநியோகித்தல்.
- எரிபொருள் வழங்கற் சங்கிலி ஊடாக அதன் தரத்தினையும் நம்பகத் தனமையினையும் உறுதிப்படுத்துதல்.
- பெற்றோலியப் பொருட்களை வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.

1.3 அதிவிசேட முன்னுரிமைகள்

- இலங்கையில் சக்திவளப் பாதுகாப்பு மற்றும் தன்னிறைவினை உறுதிப்படுத்துவதற்கான கொள்கை மற்றும் மூலோபாயக் கட்டமைப்பினைத் தாபித்தல்.
- இயற்கைவாயு தொடர்பான ஆராய்ச்சிகளைத் துரிதப்படுத்துதல்.
- எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்து அவற்றை நவீனமயப்படுத்துதல்.
- திருகோணமலையிலுள்ள எண்ணெய் களஞ்சிய தாங்கிகளை புனரமைத்தல் அபிவிருத்தி செய்தல்.
- மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தனியார்துறை தொழில்முயற்சி-யாளர்களை ஊக்குவித்தல்.
- கைத்தொழில் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி மிகவும் செயற்றிறன்மிக்க எரிசக்தி உற்பத்தியை ஊக்குவித்தல்.
- புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை இயற்றுவதன் மூலம் கட்டிட நிர்மாணத்துறையில் எரிசக்திப் பாவனையை அதிகரித்தல்.

1.4 அமைச்சின் பிரதான நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

(i) தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுக்கிணங்க சக்திவலு விடயத்திற்குப் பொருத்தமான கொள்கைகளை உருவாக்குதல்.

(ii) அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள விடய எல்லைக்குரிய அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவைக்கும் சட்டதிட்டங்களை சட்டவாக்கத் துறைக்கும் சமர்ப்பித்தலும் அதற்குரிய முன் நோக்கிய செயற்பாட்டு-முறைகளைப் பின்பற்றுதலும்.

(iii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கமைய, தமது அமைச்சின் விடயஎல்லைக்குரியதாக வருடாந்த வரவு செலவு மூலம் வழங்கப்படும் ஒதுக்கீட்டினுள் துறைசார் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வழிநடத்தல், நிதி ஒதுக்கீடுகளை உச்சகட்ட பயனுறுதியான வகையில் வழங்குதலும் மேற்பார்வை செய்தலும்.

(iv) தேசியக் கொள்கைகளுள் அமைச்சின் நோக்கு, பணி மற்றும் நோக்கங்களை மக்களின் தேவைகளை இலக்காகக் கொண்டு இற்றைப்படுத்துதல்.


(v) அமைச்சின் விடய எல்லையை செயற்படுத்துவதற்குத் தேவையான சிறந்த பதவியணியினரைத் தீர்மானித்தல், மற்றும் பல நிறுவனங்களுக்கு / பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ள பதவியணிக்கு குறிப்பிட்டவாறு பொறுப்புக்களைக் கையளித்தல்.

(vi) அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றினை நிறைவேற்றும் வகையில் செயற்படுவதற்காக வழிகாட்டுதலும் கண்காணித்தலும்.

(vii) அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து நிறுவனங்களதும் நிர்வாகப் பணிகள், கணக்கு நடைமுறைகள், பெறுகை அலுவல்கள் என்பவற்றை உரிய தரத்துக்கமைய மேற்கொள்ளுவதில் பொறுப்பாக இருத்தல் மற்றும் கணக்காய்வுப் பணிகளுக்கு உதவி புரிதல்

(viii) வலுசக்தி தொழிற்துறைக்கு பொருத்தமான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் என்பவற்றை மக்கள் நேயமாக எளிதாக்கி மக்களை மையமாகக் கொண்ட பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றதக்க ஒழுங்குகளைச் செய்தல்

1.5 நிர்வாகக் கட்டமைப்பு (வலுசக்தி பிரிவு)



1.6 அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள்

- **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC)**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானச் சட்டம் மற்றும் பின்னர் திருத்தப்பட்ட சட்டங்களின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC) வலுசக்தி அமைச்சின் கீழ் அரச நிறுவனமாக செயற்படுவதோடு இந் நிறுவனம் பெற்றோலியப் பொருட்களைள் இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், சுத்திகரித்தல், வழங்கல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு நாடு பூராகவும் எரிபொருளை தடையில்லாது வழங்குவதனை உறுதிசெய்கின்றது.

- **வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம் (CPSTL)**

வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம் (CPSTL) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இந் நிறுவனம் பொது வழங்குனர் என்ற வகையில் விநியோக மற்றும் களஞ்சியச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. மேலும், 2003.10.13 ஆம் திகதியிடப்பட்ட 1310-8 ஆம் இலக்கமிடப்பட்ட வாத்தமானியிற்கிணங்க, எரிபொருட்களை களஞ்சியப்படுத்தல், குழாய் மூலமான பரிமாற்றல் மற்றும் விநியோகித்தல் செயற்பாடுகளை பொது வழங்குனர் என்ற வகையில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- **இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL)**

2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை நிறுவப்பட்டுள்ளதுடன், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட கீழ் நிலை பெற்றோலிய தொழிற்துறை செயற்பாடுகளையும் பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றி வருகின்றது

1.7 வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களின் விபரங்கள் (ஏதாவது இருப்பின்)

இவ் அமைச்சின் கீழ் வரும் பெற்றோலியப் பிரிவில் எவ்வித வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களும் அமுல்படுத்தப்படவில்லை.

அத்தியாயம் 02

எதிர்கால முன்னோட்டம் மற்றும் செயலாற்றுகைகள்

2.1 அறிமுகம்

இவ் அத்தியாயம் 2021 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களின் முன்னேற்றம், எதிர்கால பார்வை மற்றும் சவால்களை முன்வைக்கிறது. மேலும், "இலங்கையை ஆசியாவின் சக்திவலுவின் கேந்திரமாக மாற்றுதல்" என்பதே இவ் ஆண்டில் பல செயற்திட்டங்களை அமுல்படுத்திய இவ் அமைச்சின் தூரநோக்கு கொள்கையாக உள்ளது. அதன் மூலம் நாட்டின் தொடர்ச்சியான சக்திவலுத் தேவையை பூர்த்தி செய்தல், சக்திவலுப் பாதுகாப்பை உறுதி செய்தல், செயற்திறன்வாய்ந்த எரிபொருள் சேமிப்பு வசதிகளை உருவாக்குதல், எரிபொருள் வழங்கல் சங்கிலியின் தரம் மற்றும் அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் எரிபொருள் தேவைகளை உள்நாட்டிலேயே பூர்த்தி செய்வதற்காக பெற்றோலிய அகழ்வுகளை துரிதப்படுத்துதல் போன்றனவும் இவ் அத்தியாயத்தில் உள்ளடங்கும்

2.2 செயற்பாடுகள்

2021 ஆம் ஆண்டில் அடையப்பட்ட சாதனைகள்



2.2.1 பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு அகழ்வுகள்

இயற்கை வாயு அகழ்வினை விரைவுபடுத்துதல்" என்பதை ஒரு குறிப்பிட்ட முன்னுரிமைப் பிரிவாக அடையாளம் காணும் வகையில், அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் விடயங்கள் மற்றும் செயல்பாடுகளை வழங்குவதற்காக 2020.08.09 ஆம் திகதியிடப்பட்ட 2187/27 வர்த்தமானியின் மூலம் இவ் பொறுப்புக்கள் எமது அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. காவேரி, மன்னார் மற்றும் இலங்கை கடற் படுகைகளில் பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு படிமங்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்ட போதிலும், பெற்றோலிய அகழ்வு மற்றும் அபிவிருத்திகளில் காணப்பட்ட தடைகளால் இற்றைவரை இதனை மெய்ப்பிக்க முடியவில்லை. இதற்கிணங்க, அந்த தடைகளை உடைத்தெறிந்து, பெற்றோலிய அகழ்வுக்கு தேவையான முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன், புதிய பெற்றோலிய வளங்கள் சட்டத்தை உருவாக்குதல், பெற்றோலிய அபிவிருத்தி அதகார சபையினை நிறுவுதல், புதிய கடலுக்கு அப்பால் உள்ள ஹைட்ரோகாபன் ஆய்வு நிலத் தொகுதி வரைபடத்தை வெளியிடுதல், இயற்கை வாயுவிற்கான தேசிய கொள்கையை செயற்படுத்துதல், அத்துடன் வானில் இருந்து ஈர்ப்பு விசை மற்றும் காந்தப் புல ஆய்வுகளை நடாத்துதல் போன்றவற்றை உள்ளடங்கிய பிற முதலீட்டுத் திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்துதல் போன்றன 2021 ஆம் ஆண்டில் நடந்தேறியுள்ளன.

(அ) பெற்றோலிய வளங்கள் சட்டத்தினை உருவாக்குதல்

2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் ஊடாக இலங்கையின் மேல்நிலை பெற்றோலிய தொழிற்துறையின் அபிவிருத்தி நடவடிக்கை ஒழுங்குபடுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், இச் சட்டத்தில் உள்ள நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்புக்கள் போதுமானதாக உள்ளதுடன் தெளிவற்ற தன்மையிலும் உள்ளதனால் இத் தொழிற்துறைக்கு அரசாங்கத்தினால் அதிகளவு முதலீட்டாளர்களை ஈர்க்கமுடியால் போயுள்ளமையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இதன் குறைபாடுகளை நிவர்த்திசெய்யுமுகமாகவும் மற்றும் மிகப்பொருத்தமான நிறுவனக் கட்டமைப்பை தாபிப்பதற்கும் 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டம் 2021.10.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சட்டத்தின் சிறப்பம்சங்கள்

- புதிய சட்டத்தின் மூலம் குறிப்பிட்ட மற்றும் சுயாதீனமான ஒழுங்குமுறை அதிகாரங்களுடன் இலங்கையின் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையை நிறுவுதல்.
- சில ஒழுங்குமுறை அதிகாரங்களை இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்குதல் மற்றும் அமைச்சரிடம் உள்ள ஒழுங்குமுறை அதிகாரங்களை பன்முகப்படுத்துதல்.
- இலங்கை அரசாங்கத்தின் பங்கேற்பு உரிமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு தேசிய பெற்றோலிய செயற்பாட்டாளரை நிறுவுதல்.
- மூலோபாயத் திட்டத்தின்படி பெற்றோலிய வளங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டுதல் தொடர்பான கொள்கை ஆலோசனைக் குழுவை நிறுவுதல்.
- பெற்றோலிய வளங்கள் மற்றும் பெற்றோலிய தரவுகளின் அரச உரிமைக்கான ஏற்பாடுகளை செய்தல்
- இலங்கையின் பெற்றோலிய வளங்களின் அகழ்வு, அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் முகாமைத்துவத்திற்கான ஏற்பாடுகளை செய்தல்.
- சுதந்திரமான, செயற்திறன் மிக்க மற்றும் வெளிப்படையான மேல்நிலை தொழில்துறைக்கான ஏற்பாடுகளை செய்தல்.





(ஆ) இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையை தாபித்தல்

குறித்த அதிகாரங்களைக் கொண்ட சயாதீனமான நபரின் மூலம் அனைத்து தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் அதிகார சபையின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் பெற்றோலிய வளங்கள் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது. மேலும், அவ் அதிகார சபைக்கான பணிபாளர் சபைக்கு பணிப்பளர்களை நியமிப்பதற்கான ஆகக் குறைந்த தகுதிகள் அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க, இத் தொழிற்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையினால் வெற்றிகரமாக இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


(இ) தேசிய பெற்றோலியம் மற்றும் எரிவாயு நிறுவனத்தை தாபித்தல்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழிற்துறைகளையும் அரசாங்கம் முகாமைத்துவம் செயவதற்கான உரிமையை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பெற்றோலிய வளங்கள் சட்டத்தில் உள்ள பிரிவு 25 (1) இன் ஏற்பாடுகளின் கீழ் சட்டப்பூர்வ நிறுவனமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடு உள்ளது. இதற்கிணங்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாக தேசிய எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனத்தை இணைத்துக்கொள்ளுமாறு கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு மேலதிக வருவாயை ஈட்டுவதற்கும் மற்றும் பெற்றோலிய அகழ்வுத் தொழிற்துறையில் உள்ள உள்ளூர் கனிம படிமங்களை விருத்தி செய்வதற்கும் எதிபார்க்கப்பட்டுள்ளது. மற்றொரு பாரிய எதிர்பார்ப்பு என்னவெனில், நீண்ட காலத்தில் இவ் தேசிய எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனத்தை சர்வதேச ரீதியான நிறுவனங்களுக்கு நிகராக இவ் நிறுவனத்தின் செயற்பாடுகளை மாற்றுவதாகும்.

(ஈ) கடலுக்கு அப்பால் உள்ள புதிய ஹைட்ரோகாபன் அகழ்வு தொடர்பான புதிய வரைபடம் பிரசுரிக்கப்பட்டமை

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை, சர்வதேச ஆய்வுத் தொகுதிகளின் எல்லை நிர்ணய செயல்முறை மற்றும் தற்போதைய பொருளாதார மற்றும் தொழிற்துறை போக்குகளை மதிப்பாய்வு செய்த பின்னர், இவ் புதிய கடலுக்கு அப்பால் உள்ள கனிம படிவ வரைபடத்தை தயாரித்துள்ளது. இவ் வரைபடமானது 871 சிறிய தொகுதிகள் மற்றும் மன்னார், காவேரி மற்றும் இலங்கை கடற்படுகைகளை உள்ளடக்கிய மூன்று பெரிய தொகுதிகளையும் உள்ளடக்கியுள்ளதுடன், இவ் வரைபடம் 2021 யூலை 22 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த புதிய தொகுதி வரைபடத்தை தயாரிப்பதற்கான

பிரதான நோக்கம், கூட்டு கற்கைக்கு தேவையான சிறிய தொகுதியை தேர்வு செய்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதும் மற்றும் அகழ்வுச் செயற்பாடுக்கான முதலீட்டாளர்களின் ஈர்ப்பினை அதிகரித்து முதலீட்டு அபாயத்தினை குறைத்து குறுகிய காலத்தில் அகழ்வுச் செயற்பாடுகளை பூர்த்திசெய்வதாகும்.




2021 ஆம் ஆண்டில் அகழ்வு தொழற்துறையில் அமுல்படுத்தப்பட்ட முதலீட்டுத் திட்டங்கள்

(உ) வானிலிருந்தான ஈர்ப்புவிசை (Air Borne Gravity) மற்றும் காந்தப்புல தரவுகளை பெற்றுக்கொள்ளும் ஆய்வுகள்

அப்போதிருந்த பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் மற்றும் Bell Geospace Company க்கும் இடையில் பல வாடிக்கையாளர் (multi- client) வானிலிருந்தான ஈர்ப்புவிசை (Air Borne Gravity) மற்றும் காந்தப்புல ஆய்வுத் தரவுகளை பெற்றுக்கொள்ளுதல், தயாரித்தல் மற்றும் அனுமதிப்த்திர சந்தைப்படுத்தல் உடன்படிக்கைக்கிணங்க, வானிலிருந்தான ஈர்ப்புவிசை (Air Borne Gravity) 2021 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் ஊடாக, கடலுக்கு அப்பால் உள்ள M1, M2, C1 மற்றும் C2 துண்டங்களை உள்ளடக்கிய வகையில் 14,000 கி.மீ. நீளமான ஈர்ப்பு விசை உள்ளடக்கிய பகுதியில் காந்தப்புல தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், M1 துண்டத்தின் சிறிய பகுதி மற்றும் C1 துண்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதிகள் இந்திய கடல் எல்லைக்குள் வருவதால் திட்டமிட்டதன் படி முழுமையாக வானிலிருந்தான ஈர்ப்புவிசை (Air Borne Gravity) மற்றும் காந்தப்புல தரவுகளை பெற்றுக்கொள்ளும் ஆய்வுகள் பூர்த்திசெய்யப்படவில்லை. இந்திய கடல் எல்லையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஒப்புதல் கோரப்பட்டுள்ளதுடன் இவ் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்டதும் இவ் ஆய்வுகள் தொடாந்து முன்னெடுக்கப்படும். இவ் ஆய்வின் அனைத்து செலவினங்களும் இலங்கை அரசிற்கு எவ்வித செலவினங்களும் ஏற்படாது Bell Geospace Company நிறுவனமே அனைத்து செலவினங்களையும் ஏற்றுக்கொள்ளும். இதன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி USD 927,000 ஆகும்.







(ஊ) பல வாடிக்கையாளர் அடிப்படையில் நில அதிர்வு தரவுகளை கையகப்படுத்தல், செயலாக்கம்/மறு செயலாக்கம், சந்தைப்படுத்தல் மற்றும் அனுமதிப்பத்திர சுற்று நிகழ்ச்சிகள்

2016 ஆம் ஆண்டிலிருந்து காலத்திற்கு காலம் இலங்கை அரசுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், Sclumberger நிறுவனத்தின் துணை நிறுவனமானது பல வாடிக்கையாளர் (multi- client) அடிப்படையில் தரவுகளை பெற்றுக்கொள்ளுதல், செயற்படுத்துதல், மீள் செயற்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் அனுமதிப்பத்திர சுற்று நிகழ்ச்சிகளை முன்னெடுத்திருந்தது. இவர்கள் 2005 மற்றும் 2009 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 5100 கிலோமீற்றர் நீளத்திற்கு நில அதிர்வு தரவுகளைப் பெற்று மீள் செயற்படுத்துதல் செயற்பாடுகளை பூர்த்திசெய்துள்ளனர். இதனூடாக தரவுகள் சரிசெய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளதுடன் தரவுகளின் நம்பகத்தன்மையும் அதிகரித்துள்ளது.

(எ) **M1 மற்றும் C1 துண்டங்களில் பெற்றோலிய அகழ்வுச் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திகள்**

மன்னாரில் உள்ள M1 துண்டம் மற்றும் காவேரியில் உள்ள C1 துண்டம் ஆகியவற்றில் எண்ணெய் மற்றும் வாயு அகழ்வு மற்றும் உற்பத்திக்களுக்கான சர்வதேச போட்டித்தன்மையுடன் கூடிய கேள்வி மனுக்கோரல்கள் 2019 ஆம் ஆண்டு கோரப்பட்டதுடன் இதற்கான கேள்வி மனு மதிப்பீட்டுப் பணிகள் 2021 மே மாதத்தில் இல் முடிவடைந்துள்ளது. M1 மற்றும் C1 துண்டங்களின் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையை வேறுபடுத்துவதற்காக 2021 ஆண்டு முழுவதும் இலங்கை அரசால் Serendive Energy (Pvt) Ltd நிறுவனத்துடன் பேரம்பேசப்பட்டதுடன் 90% மான பேரம்படுத்தல்கள் நிறைவடைந்துள்ளன. இதன் காரணமாக, 2022 ஆண்டின் முதல் அரையாண்டில் இறுதி பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் ஈடுபடமுடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ஏ) **M2 துண்டத்தில் உள்ள டொறாடோ (Dorado) வாயுக் கண்டுபிடிப்புக்களின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துதல்**

2011 ஆம் ஆண்டு மன்னார் கடற்படுக்கையில் உள்ள M2 துண்டத்தில் நடைபெற்ற அகழ்வு செயற்பாட்டின் மூலம் "டொராடோ" (Dorado) மற்றும் "பாரகுடா" (Barracuda) என பெயரிடப்பட்ட பகுதிகளில் இரண்டு இயற்கை வாயு கண்டுபிடிப்புகள் உறுதி செய்யப்பட்டன. இயற்கை வாயு கண்டுபிடிப்புகளின் அபிவிருத்தி மற்றும் அகழ்வுகளுக்கு பொருத்தமான முதலீட்டாளரை ஈர்ப்பதற்கான முயற்சிகள் 2017-2019 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், M2 துண்டத்தில் உள்ள இயற்கை வாயு படிமங்களை அகழ்தெடுப்பதற்காக் 2019 ஆம் நடைபெற்ற அனுமதிப்பத்திர சுற்றின் மூலம் எந்தவொரு பொருத்தமான, அனுபவம் வாய்ந்த மற்றும் திறமையான ஆழ்கடல் செயற்பாட்டாளர்களையும் கவர்ந்திழுக்க முடியவில்லை.

இதனால், "டொராடோ" (Dorado) பகுதியில் உள்ள இயற்கை வாயுப் படிமங்களின் அகழ்வுப் பணிகளை துரிதப்படுத்துவதற்காக 2021 செப்ரெம்பரில் குறுகிய கால கற்கை நெறியொன்று சிறந்த தெரிவாக அடையாளம் காணப்பட்டது. இக் கற்கை நெறி ஊடாக, இயற்கை வாயு கண்டுபிடிப்புக்களை சந்தைப்படுத்துவது தொடர்பான அரசின் நோக்கத்தினை தெளிவான முதலீட்டாளர்களுக்கு தெரிவிக்க முடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ஐ) **சர்வதேச சந்தைப்படுத்தல் நிகழ்ச்சிகள்**

சர்வதேச ரீதியாக பிரபலமான எண்ணெய் மற்றும் இயற்கை வாயு அகழ்வு நிறுவனங்கள் மற்றும் இத் தொழிற்துறை தொடர்பான உற்பத்தியாளின் இலங்கை தொடர்பான நேர்மறையான தீர்மானங்களைப் பெற்றுக்கொளவதற்காகவும் மற்றும் இதனை ஊக்குவிக்கு முகமாகவும், 2021 செப்ரெம்பர் - டிசம்பர் மாதத்தில், சர்வதேச ரீதியாக மேல்நிலை எண்ணெய் மற்றும் வாயு தொழிற்துறை தொடர்பாக சர்வதேச ரீதியாக புகழ்பொற்ற சந்தைப்படுத்தல் பத்திரிகைகள் மூலம் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.2 எரிபொருள் பரிமாற்றல் குழாய் முறையை விருத்தி செய்தல்

குறைந்த செலவில் குழாய்கள் ஊடாக எரிபொருட்கள் அதிக வினைத்திறனுடன் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. அத்துடன், குழாய்கள் ஊடாக எரிபொருட்கள் கொள்கலனில் இருந்து பிரதான முனையம், சுத்தகரிபபு நிலையத்திற்கும் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து களஞ்சிய முனையத்திற்கும் எரிபொருள் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. மேலும், சிறு அளவில் மின்சார உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் குழாய்கள் மூலம் பரிமாற்றம் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

குழாய்கள் மூலம் எரிபொருட்கள் பரிமாற்றம் செய்யப்படுவதன் நன்மைகளைக் கவனத்திலெடுத்து, குழாய்கள் மூலமான எரிபொருட்கள் பரிமாற்றத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க,

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு கெரவெலபிற்றியவில் இருந்து களனிதிஸ்ஸ வரையான மின்சார நிலையம் வரை இயற்கை வாயுவை பரிமாற்றம் செய்வதற்கான முன்மொழியப்பட்ட மீளவாயுவாக்கல் பகுதிக்கான (Regassification Unit) குழாய் கட்டமைப்பு நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் அதேநேரத்தில் கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதிக்கு சமாந்தரமாக, ஜெட் A-1 எரிபொருளை பரிமாற்றம் செய்வதற்கான 22 கி.மீ. நீளமான 10" விட்டமான குழாய்த் தொகுதி முத்துராஜவலவில் இருந்து கட்டுநாயக்க வரை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

(அ) கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையம் வரையான எரிபொருள் பரிமாற்றல் குழாய் கட்டமைப்பு நிர்மாணம்

தற்போதுள்ள கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையம் வரையான எரிபொருள் பரிமாற்றல் குழாய் முறைமையின் ஊடாகவே இறக்குமதி செய்யப்படும் அனைத்து எரிபொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றது. அத்துடன் சில வேளைகளில் இவ் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் காரணமாக எரிபொருள் பரிமாற்றங்கள் தடைப்படுகின்றன. மேலும், எரிபொருட்கள் இறக்குமதி செய்யப்படும் திறன் இவ் குழாய்களின் வினைத்திறனிலேயே தங்கியுள்ளதுடன் இவ் கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையம் வரையான எரிபொருள் பரிமாற்றல் குழாய் முறைமையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு இதனை புனருத்தாபனம் செய்யவேண்டியது மிக அவசியமானதாக உள்ளது. தற்போது புதிய குழாய்களை நிர்மாணிப்பது மிகவும் அத்தியாவசியமாக உள்ளதோடு பின்வரும் இரு கட்டங்களின் இவை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவ முனையம் வரை செல்லும் 14 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை புனரமைத்தல்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைத்தின் ஊழியர்களின் பங்களிப்புடன் 5750 மீற்றர் நீளமான இக் குழாயினை பழுதுபார்க்கும் பணிகள் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 94 மிலிலியன் ஆகும். இதற்கான நிதி வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன் இதன் பணிகள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இதன் செயற்பாடுகளில் 5% பூர்த்தியடைந்துள்ளது. மேலும் இக் குழாயின் பழுதுபார்த்தல் பணிகளை முழுமையாக 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பின்பு உலை எண்ணெயை அதிக வினைத்திறனுடன் பரிமாற்றம் செய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு குறுக்கேயான குழாய்த் திட்டம்

இந்த திட்டத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதி விதிமுறைகளின் கீழ் பொருத்தமான முதலீட்டாளர்களை அடையாளம் காணுதல் என்பதன் பேரில் கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவ முனையம் வரை புதிய நிலத்தடி குழாய் முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் மூலம் நாட்டுக்கு குறுக்கேயான குழாய் திட்டத்திற்கு வரையறுக்கப்பட்ட போட்டி அடிப்படையிலன முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதுடன் இவ் ஒப்பந்தமானது M/S China Petroleum Pipeline Engineering Company Limited நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், திரவ இயற்கை இயற்கைவாயு பரிமாற்றல் குழாய்கள் தொடர்பான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டத்தில ஈடுபட்டுள்ளமை போன்ற திட்டங்களின் நோக்கில் கணிசமாக மாற்றப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, திருத்தப்பட்ட நோக்கத்தின் கீழ் M/S China Petroleum Pipeline Engineering Company Limited நிறுவனத்திடமிருந்து புதிய கேள்வி மனுக்கோரல் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன்

இவ் கேள்வி மனு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான இறுதி தீர்மானத்தின் படி, குழாய்கள் புதைக்கப்பட வேண்டிய பகுதிகள் தொடர்பாக நிலைமை அறிக்கையை (condition report) பெற்று பெறுகை செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) முத்துராஜவல போயாவில் இருந்து முத்துராஜவல முனையம் வரை உலை எண்ணெயை பரிமாற்றம் செய்யும் குழாயை டீசலை பரிமாற்றம் செய்யும் குழாயாக மாற்றம் செய்தல்

தற்போதுள்ள குழாய் முறைமையினை அதிக வினைத்திறனுடன் பயன்படுத்துவதன் ஊடாக அதி உச்சளவிலான பயன்பாட்டை பெற்றுக்கொளவதே இதன் நோக்கமாக உள்ளது. கொலன்னாவை முனையத்தினூ டாக உலை எண்ணெயை பாரிமாற்றம் செய்யும் குழாயை கட்டுப்படுத்தி, முத்துராஜவலவிற்கு உலை எண்ணெயை பரிமாற்றம் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் 18 அங்குல விட்டமான குழாயை, டீசலை பரிமாற்றம் செய்யும் குழாயாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, டீசல் மற்றும் பெற்றோலை அதிக வினைத்திறனுடன் இறக்குவதன் ஊடாக கப்பல் கட்டணமாக செலுத்தப்படும் தாமதக் கட்டணங்களும் பெருமளவில் குறைவடையும்(தாமதக் கட்டணம் கிட்டத்தட்ட US $ 18,000).

(இ) மின்சார உற்பத்திக்காக திரவ இயற்கை வாயுவை அறிமுகப்படுத்துவதற்கான திரவ இயற்கை வாயு குழாய் கட்டமைப்பு நிர்மாணம்

எரிபொருனை உபயோகித்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக அதிக செலவினம் ஏற்படுவதோடு மேலதிகமாக சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் பச்சைவீட்டு வாயுக்களும் அதிகரிக்கின்றன. இற்கிணங்க, மின்சார உற்பத்திக்காக புதிய சக்தி வளமான இயற்கை வாயு/திரவ இயற்கை வாயுவை அறிமுகப்படுத்துவதற்கான திட்டத்தை கூட்டாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் (CPC) இலங்கை மின்சார சபையும் (CEB) முன்னெடுத்துள்ளன. இத் திட்டத்திற்கு அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதல் கிடைத்துள்ளதுடன இது மூன்று பிரிவினைக் கொண்டதாகும். அவையாவன, மிதக்கும் மீளவாயுவாக்கல் களஞ்சியத் தொகுதி (FSRU), சக்தியினை பிறப்பிக்கும் இயந்திரங்களுக்கான வாயு குழாய்த் தொகுதி வலைப்பின்னலை நிர்மாணித்தல் மற்றும் நிலத்தினை அடிப்படையாகக் கொண்ட முனையத்தினை நிர்மாணித்தல் போன்றனவாகும். இதில் மிதக்கும் மீளவாயுவாக்கல் களஞ்சியத் தொகுதி (FSRU) மற்றும் நிலத்தினை அடிப்படையாகக் கொண்ட முனையத்தினை நிர்மாணித்தல் பணிகளை இலங்கை மின்சார சபையும் (CEB) மற்றும் சக்தியினை பிறப்பிக்கும் இயந்திரங்களுக்கான வாயு குழாய்த் தொகுதி வலைப்பின்னலை நிர்மாணித்தல் பணிகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் (CPC) முன்னெடுக்கும். மேலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நிர்மாணித்தல், உரிமப்படுத்தல், இயக்குதல், கைமாற்றுதல் (BOOT) அடிப்படையின் கீழ் களனிதிஸ்ஸ மின்சார நிலையம் வரை, சக்தியினை பிறப்பிக்கும் இயந்திரங்களுக்கான வாயு குழாய்த் தொகுதி வலைப்பின்னலை நிர்மாணித்தல் பணிகளையும் முன்னெடுக்கும்.

இவ் குழாய் நிர்மாணப் பணிகளுக்கு பங்குதாரர்களிடமிருந்து ஆரம்ப உடன்படிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இத் திட்டத்திற்கான முதலீட்டாளர்களை தெரிவுசெய்வதற்கான திட்ட முன்மொழிவுகள் 2021.02.18 ஆம் திகதி கோரப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட திட்ட முன்மொழிவுகளுக்கான தொழிநுட்ப மற்றும் நிதியியல் முன்மொழிவுகள் திட்டக் குழுவினால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் திட்ட முதலீட்டாளருடன் தொழிநுட்ப ரீதியான பேரம்பேசல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குழாயினை நிர்மாணிப்பதற்குத் தேவையான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதுடன் இத்திட்டம் திட்டமிட்டதன் படி 2023 ஆம் ஆண்டில்

பூர்த்திசெய்யப்படும். இத் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி USD 40 மில்லியன் ஆகும். இத் திட்டம் அமுல்படுத்தப்படின் இலங்கை மின்சார சபைக்கு வருடாந்தம் ரூ. 42 பில்லியனை சேமிப்பு ஏற்படும்.

(ஈ) விமான எரிபொருள் விநியோகத்திற்கான குழாய் பாதை மற்றும் விமான எரிபொருள வழங்குவதற்கான புதிய களஞ்சிய வளாகத்தை நிர்மாணிப்பதற்கான திட்டம்.

இலங்கையில் விமான எரிபொருளை வழங்கும் ஒரேயொரு வழங்குனராக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செயற்படுவதோடு இத் தொழிற்துறையின் மூலம் அதிகளவான அன்னியச் செலாவணியை பெற்றுக்கொள்கின்றது. இதனூடாக, பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் (BIA) ஊடாக செயற்படுத்தப்படும் சர்வதேச மற்றும் உள்ளூர் விமானங்களுக்கு விமான எரிபொருளை வழங்கும் தனியுரிமை நிறுவனமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) விளங்குகின்றது. வரையறுக்கப்பட்ட விமானங்கள் மற்றும் விமான சேவை (AASL) நிறுவனத்தால் விமானநிலைய ஆலோசகராக நியமிக்கப்பட்ட M/s. Japan Airport Consultants INC (JAC) நிறுவனத்தால் முன்வைக்கப்பட்ட எதிர்வுகூறல்களின் அடிப்படையில், ஜெட் A-1 எரிபொருளுக்கான கேள்வி குறிப்பிடத்தக்களவில் வருடாந்தம் அதிகரிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், 2027 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கான ஜெட் A-1 எரிபொருளுக்கான கேள்வி, அந் நேரத்தில் காணப்படும் நாளொன்றுக்கு 1.2 மில்லியன் லீற்றருக்கு எதிராக நாளொன்றுக்கு 3.0 மில்லியன் லீற்றர் மட்டத்தை தாண்டுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. முத்துராஜவெல பெற்றோலிய களஞ்சிய முனையத்தில், 92000 கனமீற்றர் மொத்த செயற்திறன் கொண்ட தாங்கிப் பண்ணையை நிர்மாணிப்பதற்கும் மற்றும் விமான எரிபொருள் பரிமாற்றல் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக பாதைக்கு சமாந்தரமாக முத்துராஜவலவில் இருந்து கட்டுநாயக்க விமானநிலையம் வரை 22 கிலோமீற்றர் நீளம் கொண்ட 10 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை நிர்மாணிப்பதற்கும் சர்வதேச போட்டி அடிப்படையிலான கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன் இவ் ஒப்பந்திற்கான ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் USD 46.3 மில்லியன் ஆகும். அத்துடன் ஆரம்பத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத் திட்டத்திற்கு நிதியினை ஒதுக்குவதற்கு திட்டமிடப்பட்டபோதும், தற்போதுள்ள நிலைமைகள் காரணமாக வெளிநாட்டு வங்கியில் இருந்து இத் திட்டத்திற்கான நிதியினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.3 புகையிரதம் மூலம் எரிபொருள் போக்குவரத்தை வலுப்படுத்தும் திட்டம்

கொள்கலன் மூலம் எரிபொருட்களைக் கொண்டு செல்வதை விட புகையிரதம் மூலம் எரிபொருட்களை கொண்டு செல்வது ஒப்பீட்டளவில் மலிவானதுடன், இலங்கையில் எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோகம் தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சமர்ப்பித்த விசேட கணக்காய்வு அறிக்கையும் இதனை சுட்டிக்காட்டியுள்ளது. இவ் அறிக்கையின படி, புகையிரத வண்டிகள் மூலம் எரிபொருட்களை கொண்டு செல்வதனை விட, கொள்கலன் மூலம் எரிபொருட்களை கொண்டு செல்வதற்கு சுமார் 200% அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. இதற்கிணங்க, பொதுவாக 30% ஆக இருந்த புகையிரம் மூலமான எரிபொருள் போக்குவரத்தை 2023 ஆம் ஆண்டளவில் 60% ஆக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒரே நேரத்தில் அதிகளவான எரிபொருட்களை கொண்டு செல்லும் போது புகையிரதத்தில் ஏற்படும் பழுதுகள் நேரடியாக போக்குவரத்தை பாதிக்கும் என்பதால் புகையிரத வண்டிகள் மூலம் எரிபொருள் போக்குவரத்தை 40% மட்டுமே அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது புகையிரதம் மூலமான எரிபொருள் போக்குவரத்து 38% வளர்ச்சியடைந்துள்ளதுடன் இதன் 40% மான வளர்ச்சி இலக்கை அடைவதற்கு

பொருத்தமான உட்கட்டுமான வசதிகள் அவசியமாகும். இதனால் இப் பணிகள் போக்குவரத்து அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கிணங்க, வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் கொலன்னாவை முனையத்தில் உள்ள புகையிரதக் கட்டமைப்பை புனரமைக்கும் பணிகள் இத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ.80 மில்லியன் ஆகும்.

2.2.4 எரிபொருள் களஞ்சியத் திறனை விரிவுபடுத்தல் தொடர்பான திட்டங்கள்

எரிபொருள் சேமிப்பு திறன் என்பது ஒரு நாட்டின் எரிபொருள் பாதுகாப்பைக் குறிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். தற்போது கொலன்னாவை முனையத்தில் 240,000 மெற்றிக் தொன் திறன் கொண்ட களஞ்சிய வசதிகளும், வரையறுக்கப்பட்ட பெற்றோலிய களஞ்சிய முனைத்தால் செயற்படுத்தப்படும் முத்துராஜவலவில் 200,000 மெற்றிக் தொன் திறன் கொண்ட களஞ்சிய வசதிகளும், சப்புகஸ்கந்தவில் 64,000 மெற்றிக் தொன் திறன் கொண்ட களஞ்சிய வசதிகளும் மற்றும் திருகோணமலையில் உள்ள லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு உரித்தான தாங்கிப் பண்ணையில் 150,000 மெற்றிக் தொன் திறன் கொண்ட களஞ்சிய வசதிகளும் மொத்தமாக 654,000 மெற்றிக் தொன் திறன் கொண்ட களஞ்சிய வசதிகள் நாட்டில் உள்ளன.

எவ்வாறெனினும் எரிபொருளுக்கான கேள்வி படிப்படியாக அதிகரித்துச் செலவதனால், கட்டளைகள் பிறப்பிக்கப்பட்ட கப்பற் சரக்குகள் வரும் வரை, கையிருப்பில் உள்ள எரிபொருட்கள் வரையறுக்கப்பட்ட நாட்களுக்கே போதுமானதாக உள்ளது. மேலும், கப்பற் சரக்குகள் வருவதற்கு தாமதித்தாலோ அல்லது கப்பற் சரக்குகள் தரம் குறைந்த உற்பத்திகள் எனக் கருதி நிராகரிக்கப்பட்டாலோ தொடர்ச்சியாக எரிபொருளுக்கான கேள்வி சந்திப்பதென்பது சவால் மிக்கதொன்றாகவே உள்ளது. இதனால், தடையில்லாது தொடர்ச்சியாக எரிபொருளை வழங்குவதற்கும் மற்றும் இதனை நிலையாக பேணுவதற்கும் வசதியாகவும் எரிபொருள் களஞ்சிய திறனை விரிவுபடுத்துவதன் ஊடாக நாளாந்தம் தேவைப்படும் எரிபொருள் கையிருப்பை 30 நாட்களுக்கு பேணமுடியும். இதன் படி. பல்வேறு மூலோபாயங்களின் அடிப்படையில் இதற்கான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் படி, புதிய தாங்கிகளை நிர்மாணித்தல்,தற்போதுள்ள தாங்கிகளை புனரமைத்தல் மற்றும் திருகோணமலையில் உள்ள தாங்கிப் பண்ணையில் உள்ள பயன்படுத்தப்படாத தாங்கிகளை பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ) புதிய தாங்கிகள் நிர்மாணத் திட்டம்

தற்போதுள்ள களஞசியத் திறனை 93,000 கன மீற்றரால் அதிகரிப்பதற்கு இரண்டு கட்டங்களின் கீழ் 09 புதிய தாங்கிகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் இரண்டு திட்டங்களும் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் நிதி அனுசரணையின் கீழ் முன்னெடுக்கப்படுவதோடு எரிபொருள் களஞசியப்படுத்தல் இதன் பாரிய பொறுப்பாக உள்ளது.

(i) 29,000 கன மீற்றர் திறன் கொண்ட 03 தாங்கிகளை நிர்மாணிக்கும் திட்டம்.

2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், கொலன்னவை முனையத்தில் 29,000 கன மீற்றர் திறன் கொண்ட 03 புதிய தாங்கிகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இத் திட்டம் 2022.07.12 ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்படும் இத் திட்ட நிர்மாணப் பணிகள் இலவச வரியுடன் ரூ.942,474,240.25 தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மொத்த செயற்பாடு 2021.12.31 ஆம் திகதி அன்று 69% ஆகும். இத் திட்டம் தொடாந்தும் திட்டத்தின் படி முன்னெடுக்கப்படுகின்றது.

(ii) 64,000 கன மீற்றர் திறன் கொண்ட 06 தாங்கிகளை நிர்மாணிக்கும் திட்டம்.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில்,

கொலன்னவை முனையத்தில் 64,000 கன மீற்றர் திறன் கொண்ட 06 புதிய தாங்கிகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இத் திட்டம் 2023.02.4 ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்படும். இதற்கான கேள்வி மனுக் கோரல்கள் சர்வதேச போட்டி அடிப்படையிலான பெறுகை அடிப்படையில் கோரப்பட்டுள்ளதுடன் இத் திட்ட நிர்மாணப் பணிகள் இலவச வரியுடன் ரூ.2,049,245,013.21 தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்தக்காரரின் அசமந்த செயற்பாட்டினால் இத் திட்டமானது 22.01.19 ஆம் திகதி நிறுத்தப்பட்டது. இத் திட்டத்தின் மொத்த செயற்பாடு 2021.12.31 ஆம் திகதி அன்று 18% ஆகும்.







(ஆ) தற்போதுள் தாங்கிகளை புனரமைக்கும் மற்றும் பழுதுபார்க்கும் திட்டம்

வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் நிதியினை உபயோகித்து, தற்போதுள்ள களஞ்சியத் திறனை நிலையாகப் பேணும் வகையில், தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள தாங்கிகளை நவீன தொழிநுட்பத்தின் உதவியுடன் பழுபார்ப்பதும் மற்றும் மீள் புனரமைப்பதும் அவசியமானதாகும். அவ் பணிகள் 2021 ஆம் ஆண்டிலும் தொடாந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

தாங்கி இலக்கம்	தாங்கிகளின் திறன் (m^3)
தாங்கி இலக்கம் 14	1805
தாங்கி இலக்கம் 47	11683
தாங்கி இலக்கம் 46	11856
தாங்கி இலக்கம் 03	12500
தாங்கி இலக்கம் 23	3293

(இ) திருகோணமலையில் உள்ள எரிபொருள் தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்தல்

நாட்டின் எரிபொருள் விநியோகச் சங்கிலிக்கு மிக இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய 99 எரிபொருள் தாங்கிகள் திருகோணமலை துறைமுகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள போதிலும், இவ் வளமானது குறைந்தளவிலேயே பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இவ் எரிபொருள் தாங்கி தொகுதியை புனரமைத்து செயற்திறனுடன் உபயோகப்படுத்துவதற்காக இராஜதந்திர ரீதியில் இந்தியாவுடன் 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது.

இதன்படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் 24 தாங்கிகளையும், லங்கா இந்திய எண்ணெய் நிறுவனத்தினால் 14 தாங்கிகளையும், லங்கா இந்தியன் எண்ணெய் கம்பனி மற்றும் திருகோணமலை எரிபொருள் முனைய நிறுவனமும் இணைந்து

மிகுதி 61 தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. திருகோணமலை எரிபொருள் முனைய நிறுவனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாக இணைக்கப்பட்டுள்ளது. (2022/01/03 திகதியிடப்பட்ட 21/2285/325/050 ஆம் இலக்கமிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி). இதன்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வழிகாட்டுதலின் கீழ் இவ் தாங்கித் தொகுதியின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அடுத்து வரும் சில வருடங்களில் இவ் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2.2.5 புதிய சுத்திகரிப்பு நிலைய நிர்மாணம் மற்றும் தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை விரிவுபடுத்துதல்

இற்போது, நாட்டின் மொத்த எரிபொருள் கேள்வியில் சப்புகஸ்கந்தையின் அமைந்துள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒரேயொரு சுத்திகரிப்பு நிலையத்தால் 25% தத்தை மட்டுமே பூர்த்தி செய்ய முடிந்துள்ளதோடு மிகுதி 75% இறக்குமதி செய்யப்படுகின்ற சுத்திகரித்த எரிபொருளிலேயே தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பாரியளவில் அன்னியச் செலாவணி விரயமாகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனை நிவர்த்தி செய்யுமுகமாக நாளொன்றுக்கு 100,000 பரல்கள் சுத்திகரிப்புத் திறன் கொண்ட புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல், இயக்குதல், கைமாற்றுதல் (BOT) அடிப்படையில் நிறுவுவதற்கு அமைச்சரவை அமைச்சர்கள் ஒப்புதல்களை வழங்கியுள்ளதுடன் தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்புத்திறனை நாளொன்றுக்கு 45,000 பரல்களாக அதிகரிப்பதற்கான சாத்தியவளக் கற்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் மூலம் 2026 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த எரிபொருள் கேள்வியை பூர்த்திசெய்யக்கூடிய நோக்கத்தினை அடையக்கூடியதாக இருப்பதோடு இதற்கான சாத்திய வளக் கற்கைகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 2021 ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டு பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- சாத்திய வள அறிக்கை
- நகல் RFP ஆவணம்
- கட்டமைப்பு அறிக்கை (configeration report)
- சந்தை ஆய்வு அறிக்கை





சுத்திகரிப்பு நிலையத்தை தாபிப்பதற்காக நிலத்தினை கையகப்படுத்துவது தொடர்பாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவ் இடத்தில் வசிப்பவர்களிடையே அவர்களது தெரிவு தொடர்பாக ஆய்வினை நடாத்தியதுடன் இதில் 80% மானவர்கள் இவ் காணியினை கையகப்படுத்துவதற்கு தங்களது முழு சம்மதத்தை தெரிவித்துள்ளனர். இதற்கிணங்க, சுத்திகரிப்பு நிலையத்தை தாபிப்பதற்காக மேலதிக நிலத்தினை கையகப்படுத்துவதற்கு அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுக்கிணங்க காணி அமைச்சுடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ் புதிய சுத்திகரிப்பு நிலைய நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததும் நாட்டிற்குத் தேவையான சத்திகரித்த எரிபொருளை

வழங்க முடியும். இதனால், சுத்திகரித்த எரிபொருளை இறக்குமதி செய்வதனைத் தவிர்த்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதன் மூலம் பரல் ஒன்றிற்கு US $ 8 வீதம் சேமிக்க முடிவதோடு Euro VI தரத்திற்கு எமது எரிபொருளின் தரத்தினை உயர்த்த முடியும்.

2.2.6 எரிபொருளுக்கான விலை உறுதிப்படுத்தல் நிதியத்தை உருவாக்குதல்

சர்வதேச சந்தையில் தொடர்ந்து மாற்றமடையும் எரிபொருள் விலைகளால் உள்நாட்டு எரிபொருள் விலைளில் ஏற்படும் குறுகிய கால விலைத்தளம்பல்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் உள்நாட்டுச் சந்தையில் எரிபொருட்களின் விலையை நிலையாக பேணுவதற்கும் நுகர்வோர் மற்றும் அரச மட்டத்தில் நம்பகத்தன்மையை பேணும் வகையிலும் எரிபொருள் சந்தையை சீராக செயற்பட வைப்பதற்கும் பொருத்தமான கருவியினை அனுமதிப்பதென்பது அவசியமாக உள்ளது. இதற்கிணங்க, சர்வதேச சந்தைகளினால் ஏற்படும் விலைத்தளம்பலின் தாக்கத்தை தன்னகத்தே எடுத்து எரிபொருள் விலையை நிலையாகப் பேணும் வகையில் எரிபொருளுக்கான விலை உறுதிப்படுத்தல் நிதியத்தை இவ் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் உருவாக்குவதற்கு 21/1847/325/004-II ஆம் இலக்கப்பட்ட 2021.11.23 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, எரிபொருளுக்கான விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் ஏற்பாடுகளை வெளிப்படைத் தன்மையுடன் பேணும் வகையில் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனச் சட்டத்தில் பொருத்தமான கட்டுப்பாடுகள் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளுதல் என்பதன் பேரில் நகல் வரைபு தயாரிக்கப்பட்டு 2022.02.17 ஆம் திகதி அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் இவ் நிதியத்தை தாபிப்பது தொடர்பாக தேவையான ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இதனை அமுல்படுத்துவதன் ஊடாக உள்நாட்டு எரிபொருள் விலையை நிலையாக பேணமுடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2.2.7 விமான எரிபொருள் ஹைட்ரண்ட் அமைப்பு நிர்மாணம்

சர்வதேச தரத்திற்கு ஏற்ப எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்தல் நோக்கில், விமான எரிபொருள் விநியோகத்தின் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஜெட் A1 விமான எரிபொருள் களஞ்சியத் திறனை விரிவுபடுத்துவதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் II ஆம் கட்டத்தின் 2 ஆம் நிலை அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் USD 51.5 மில்லியன் ஆகும். 2021.12.31 ஆம் திகதியன்று இத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 65% ஆகும். எவ்வாறாயினும், இத்திட்டம் 2021ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்படவேண்டும். எனினும், கோவிட்- 19 தொற்று நோயின் உலகளாவிய தாக்கத்தை கருத்தில் கொண்டு, இத் திட்டக் காலம் 2022 மே மாதம் வரை நீட்டிக்கப்பட்டது.









2.2.8 உள்நாட்டு சக்திவள கலவையில் மாற்று எரிபொருளை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம்

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க சக்தி வள ஆதாரங்களை மேம்படுத்துவது வலுசக்தி அமைச்சின் பொறுப்பாகும். 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையை காபன் வெளியேற்றம் அற்ற நாடாக மாற்றும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் உள்ள சக்தி வள கலவையானது, புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டிலிருந்து தூய ஆற்றல் உள்ள மூலங்களை நோக்கி படிப்படியாகப் பயணித்து வருகிறது. மேலும், இதனை விரைவுபடுத்துவதற்காக, புதிய அறிவு மற்றும் புதிய முதலீடுகளை போன்ற துறைகள் அபிவிருத்தி செய்தல் வேண்டும். இதற்கிணங்க, சக்தி வளக் கலவையில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் உயிர்வாயு எரிபொருட்களை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ) பசுமை ஹைட்ரஜனை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம்

2021 ஆம் ஆண்டில், இலங்கையின் சக்தி வளக் கலவையில் பசுமை ஹைட்ரஜனை அறிமுகப்படுத்துவதற்காக, வலுசக்தி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ், அறிமுகப்படுத்துவதற்கான அரம்பகட்ட நடவடிக்கைகளை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகமானது எடுத்திருந்தது. இதன் விளைவாக, பசுமை ஹைட்ரஜனை உபயோகித்து மிதக்கும் சூரிய சக்தி மற்றும் காற்றாலைகளை நிறுவுவதற்கான உத்தேச திட்ட சாத்தியவளக் கற்கைகள் மேற்கொள்வதற்கு Greenstat of Norway நிறுவனத்தின் துணை நிறுவனமான Greenstat Hydrogen India நிறுவனத்துடன் 2022.02.28 ஆம் திகதி பகுதியளவிலான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இத் திட்டத்தினை வெற்றியடையச் செய்வதற்கு இலங்கையானது சர்வதேச பசுமை ஹைட்ரஜனன் சந்தையாக அபிவிருத்தியடைதல் வேண்டும்.

(ஆ) உயிர் வாயுவை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம்

2021 ஆம் ஆண்டில், உள்ளூர் சக்தி வளக் கலவையில் உயிரியல் எரிபொருட்களை (bio fuel) அறிமுகப்படுத்துவதற்கு தேவையான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் இதன் பங்குதாரர்களுடன் நடாத்தப்பட்டுள்ளது. உயிரியல் எரிபொருட்களை ஊக்குவிப்பதன் மூலம், இதுவரை நாட்டிற்குள் உற்பத்திக்காக பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்தி உயிரியல் எரிபொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணியைச் அதிகளவில் சேமிக்க முடியும்.

2.2.9 நாட்டின் தொடர்ச்சியான சக்தி வழங்கலை உறுதிசெய்வதற்காக எரிபொருளை கொள்வனவு செய்தல்

(அ) 2021 ஆம் ஆண்டின் எரிபொருள் கொள்வனவு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேசிய எரிபொருள் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பெற்றோலியப் பொருட்களின் பெரும்பகுதியை இறக்குமதி செய்து வழங்குகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 நிலைமை மற்றும்

அந்நிய செலாவணி பிரச்சினைகளுக்கு மத்தியில், குறைந்த செலவில் நாட்டிற்கு நிலையான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் தங்களை அர்ப்பணித்துள்ளன. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதியானது விசேட நிலையான பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிபபீடு செய்யப்பட்டு, மிகவும் நுணுக்கமான முறையின் கீழ் செயற்படுத்தப்படுகன்றது. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் நீண்ட கால ஒப்பந்தங்கள் மூலம் நடைபெறுகின்றன. மேலும், எதிர்பாராத தேவைகள் அல்லது எதிர்பாராத சூழ்நிலை மற்றும் சில சிறப்பு பெற்றோலிய பொருட்களுக்கு நீண்ட கால ஒப்பந்தங்களை செயற்படுத்த முடியாத சந்தர்பங்களில், பெற்றோலிய பொருட்கள் தனிக் கப்பற் சரக்கு அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில், எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்காக, 61 கப்பல் சரக்குகள் மற்றும் 39 தனிக் கப்பல் சரக்கு எரிபொருட்கள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நீண்டகால ஒப்பந்தத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது. இதன் விபரங்கள் பின்வருமாறு

பெற்றோலிய உற்பத்திகள்	தொகை (மெ.தொ)
மசகு எண்ணெய்	1,130,237.000
பெற்றோல் (92UNL)	918,458.994
பெற்றோல் (95 UNL)	103,127.545
டீசல் (0.05% M.S.)	1,287,415.372
டீசல் (0.001% M.S.)	67,673.868

(ஆ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் இறக்குமதிகள்

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் படி, 2021 ஆம் ஆண்டில், உள்ளூர் பெற்றோலியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எரிபொருளை (மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்) இறக்குமதி செய்வதற்கு சுமார் 3,465.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாகவும், 2021 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 08 பிரதான வகை எரிபொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் இறக்குமதிக்காக சுமார் 2,393 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு வகை எரிபொருளின் தொகையும், அதற்கான விலையும் கீழே உள்ள அட்டவணையில் விரிவாகக் தரப்பட்டுள்ளன.

பெற்றோலிய உற்பத்திகள்	தொகை (மெ.தொ)	செலவினம் (US$)
ஓடோ டீசல் (500 PPM)	1,495,670.14	754,970,918.50
சுப்பர் டீசல் (10 PPM)	67,673.88	81,388,037.51
பெற்றோல் 92	918,459.00	640,302,567.37
பெற்றோல் 95	103,127.56	73,980,353.64
ஜெட் A -1	178,099.59	119,982,151.29
உலை எண்ணெய் 180 CST (1.8S)	183,525.17	95,311,722.44
குறை சல்பர் உலை எண்ணெய் 180 CST (0.5S)	30,391.28	14,591,036.33
உயர் சல்பர் உலை எண்ணெய் 180 CST (0.5S)	31,488.81	16,147,569.52
மசகு எண்ணெய்	1,130,237.00	596,945,601.91
மொத்தம்	-	**2,393,619,958.51**

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

மேற்கூறப்பட்ட தரவுகளின் படி, லங்கா ஓடோ டீசலின் இறக்குமதிக்காகவே பாரியளவு செலவு செய்யப்பட்டுள்ளது. அதாவது US$ 755 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. இதற்கு அடுத்தபடியாக பெற்றோல் (ஒக்டேன் 92) மற்றும் மசகு எண்ணெய் இறக்குமதிக்கு அதிகளவு செலவு செய்யப்பட்டுள்ளது, இதற்காக முறையே US$ 640 மில்லியன் மற்றும் US$ 596 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

(இ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விற்பனைகள்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போக்குவரத்துத் தொழிற்துறை, மின்சார உற்பத்தி, கைத்தொழில் மற்றும் உள்நாட்டுத் தொழிற்துறைகளுக்கும் எரிபொருட்களை விற்பனை செய்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டின் எரிபொருள் விற்பனைகள் பின்வருமாறு

2021 ஆம் ஆண்டில், 2,016,541,380 லீற்றர் ஓடோ டீசல் மற்றும் 1,448,752,995 லீற்றர் பெற்றோல் (ஒக்டேன் 92) அதிகபட்ச விற்பனையாக பதிவாகியுள்ளது. மின்சார உற்பத்திக்காக 610 லீற்றர் ஓடோ டீசல், உலை எண்ணெய் மற்றும் நெப்தா உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, இதன் மதிப்பு ரூ.60,549 மில்லியன் ஆகும்.

பெற்றோலிய உற்பத்திகள்	விற்பனைகள் 2021 (லீற்றர்)
பெற்றோல் - 92 ஒக்டேன்	1,448,752,995
பெற்றோல் - 95 ஒக்டேன்	135,091,729
ஓடோ டீசல்	2,016,541,380
சுப்பர் டீசல்	77,682,856
மண்ணெண்ணெய்	235,902,969
கைத்தொழில் மண்ணெண்ணெய்	3,695,890
இரசாயன நெப்தா	470,243,027
உலை எண்ணெய் 800 SEC	104,784,493
உலை எண்ணெய் 1500 SEC (உயர் சல்பர்)	358,908,853
உலை எண்ணெய் 1500 SEC. (குறைந்த சல்பர்)	430,301,108
ஜெட் A -1	282,714,170
லங்கா சோல்வன் (SBP)	3,650,200

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2.2.10 பெற்றோலியம் தொடர்பான பொருட்களுக்கான வசதிகளை வழங்குதல்

2021 ஆம் ஆண்டில், உராய்வு நீக்கி எண்ணெய், தார் மற்றும் கப்பல் எண்ணெய் தொழிறதுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான அனுமதிப்பத்திரங்கள் தொழிற்துறையினருக்கு வழங்கப்பட்டதுடன் இவற்றை இறக்குமதி செய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் இவற்றுக்கான தரநிலைகளை அறிமுகப்படுத்துவதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறை

உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறையானது இவ் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. இலங்கைக்குள், உராய்வு நீக்கி எண்ணெயின் வலையமைப்பு 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 18 நிறுவனங்களையும் 29 வர்த்தக குறியீடுகளையும் கொண்டமைந்ததாகக் காணப்படுகின்றது. ஏப்ரல் 2022 க்குள் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட புதிய அனுமதிப்பத்திர சுற்றில், இந் நாட்டில் உராய்வு நீக்கி எண்ணெய் சந்தையில் ஈடுபடத் தகுதி பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில், நன்மை கருதி மேற்கொள்ளப்பட்ட மிகவும் சாதகமான நடவடிக்கைகள் காரணமாக, உராய்வு நீக்கி எண்ணெய்க்கு சர்வதேச அளவில் பயன்படுத்தப்படும் குறைந்தபட்ச தரநிலைகளை இந் நாட்டின் உராய்வு நீக்கி எண்ணெய் சந்தையில் அறிமுகப்படுத்துவற்கு உதவியாக அமைந்துள்ளது. மேலும், 2022ஆம் ஆண்டு முதல் முறையான வேலைத்திட்டத்தின் கீழ், இறக்குமதி செய்யப்படும் உராய்வு நீக்கி எண்ணெய்களை கட்டாய பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், உள்ளூர் சந்தையில் புழக்கத்தில் இருக்கும் போலி பொருட்கள் மற்றும் தரம் குறைந்த பொருட்களை ஆய்வு செய்வதற்கு விசேட வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந் நாட்டின் உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறையின் தரம் மற்றும் மேம்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வலுசக்தி அமைச்சு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றது.

இலங்கையில் உபயோகப்படுத்தப்பட்ட உராய்வு நீக்கி எண்ணெயை சுத்திகரித்து மீள – உபயோகப்படுத்துவதன் ஊடாக ஹட்ரஜன் பொருட்களை உற்பத்திசெய்வதற்கான திட்டம்

உராய்வு நீக்தி எண்ணைய் வருடாந்தம் கிட்டத்தட்ட 65,000 கி.லீ இலங்கையில் நுகரப்படுகின்றது. இவ் உராய்வு நீக்கி எண்ணெயானது பல வருடங்களாக உபயோகப்படுத்தப்பட்ட பின்னர் எந்த வித பாதுகாப்பும் இல்லாது சுற்றாடலுக்குள் வெளியேற்றப்படுவதால் நீருடன் கலந்து நீரை மாசுபடுத்துவதோடு மண்ணிற்கும் பாரிய சேதங்களை விளைவிக்கின்றது. இதனால் வெளியேற்றப்படும் இவ் எண்ணெயை சுத்திகரித்து மீள- உபயோகப்படுத்துவதற்கு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

மிகப்பொருத்தமான மதிப்பீட்டு மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளின் கீழ் சுகாதார மற்றும் சுற்றாடல் ஆபத்துக்களை குறைக்குமுகமாக பெற்றோலியம் தொடர்பான கழிவு எண்ணையை மீள- சத்திகரிக்கும் சந்தர்ப்பங்களை வழங்கும் பொருட்டு ஆர்வமுள்ள உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பங்களுக்கான வெளிபாடுகள் (EOI) கோரப்பட்டுள்ளது. இவ் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர் விரிவான திட்ட முன்மொழிவுகளை கோருவதற்கு இவ் ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தார் சந்தை

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையத்தால் உற்பத்தி செய்யப்படும் தார் உள்நாட்டுக் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லாததால், அமைச்சானது அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களுக்கிணங்க தரை இறக்குமதி செய்வதற்கான அனுமதியினை அளிக்கின்றது. இதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில் இந் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான 280,500 மெற்றிக் தொன் தாரை இறக்குமதி செய்வதற்கு 23 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப பங்களிப்புக்கள் பின்வருமாறு


உற்பத்தி	தொகை
தொகை தார் 80/100	981,460 கி.கி.
தொகை தார் 60/70	108 பரல்
பரல் தார் 60/70தொகை)	5,950,220 கி.கி.

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(இ) கப்பல் எண்ணெய்ச் சந்தை


அந்நிய செலாவணியை நாட்டிற்குள் கொண்டு வரும் ஒரு பிரதான தொழிற்துறையாக கப்பல் எண்ணெய் தொழிற்துறை உள்ளதால் இத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கப்பல் எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான அதிகாரத்தை அமைச்சு வழங்குகிறது. இதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டில், 13 நிறுவனங்களுக்கு கப்பல் எண்ணெயை இறக்குமதி செய்வதற்கும் அதன் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்குமான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் சுமார் 594,362.567 மெற்றிக் தொன் கப்பல் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டுள்ளதோடு 2022 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் சுமார் 231,778.61 மெற்றிக் தொன் கப்பல் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இ.பெ.கூ. த்தின் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம்




மூலம் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம

அ.மெ.டொ. ஒன்றிற்கான வெளிநாட்டு நாணமாற்று விகித நகர்வுகள்




மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாடுபூராகவும் விற்பனை செய்துள்ள பெற்றோலியப் பொருட்கள் – 2021




மூலம் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை விலைகள்




மூலம் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம

மின்சார நிலையங்களிற்கான விற்பனைகள் – 2021




மூலம் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம

கப்பல் எண்ணெய் இறக்குமதிகள் – 2021



மூலம் : வலுசக்தி அமைச்சு

மசகு எண்ணெய் பிளட் விலைகள் 2021



மூலம் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம

2.3 எதிர்கால நோக்கு

இலங்கையை ஆசியாவின் வலுசக்தி மையமாக மாற்றும் அரசாங்கத்தின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சபீட்சத்தின் நோக்கு" திட்டத்திற்கிணங்க, சக்திவளப் பாதுகாப்பை உறுதிசெய்து நாட்டின் சக்திவளத் தொழிற்துறையில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக, அமைச்சு அடுத்துவரும் வருடங்களுக்கு பின்வரும் திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது.

(அ) உள்நாட்டு பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு அகழ்வுகளை துரிதப்படுத்துதல்

மன்னார் படுகையில் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை அடுத்த சில ஆண்டுகளில் உள்ளூர் நுகர்வுக்கு பயன்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக மேல் நிலை பெற்றோலியத் தொழிற்துறையால் எதிர்பார்க்கப்படும் சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள், 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய

வளங்கள் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதல், தேசிய எரிபொருள் மற்றும் எரிவாயு நிறுவனத்தை இணைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தல், புதிய அகழ்வாராய்ச்சி துண்டங்களுக்கான வரைபடம் மற்றும் புதிய நகல் ஒழுங்குபடுத்தல் விதிமுறைகளை தயாரித்தல் போன்ற பிரதான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பொருத்தமான விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டதன்பின்னர், புதிய அகழ்வுத் துண்டங்களை சர்வதேச கந்தைப்படுத்தல் பிரச்சாரத்தி மூலம் சர்வதேச சந்தைகளுடாக சந்தைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு கூட்டுக் கற்கைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் உடன்பட்ட துண்டங்களில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ளுவதற்கும் 2022 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ஆ) 2026 ஆம் ஆண்டில் உள்ளூர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஊடாக உள்ளூர் பெற்றோலியப் பொருட்களை சுத்திகரித்தல்

நாளொன்றுக்கு 50,000 பரல்கள் சுத்திகரிப்பு திறன் கொண்ட சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் 1969 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது, தற்போது இதன் மூலம் உள்ளூர் எரிபொருள் தேவையில் 25% சுத்திகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதன்படி, ஒரு நாளைக்கு 100,000 பரல்கள் சுத்திகரிப்பு திறன் கொண்ட புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கும் மற்றும் உள்ளூர் எரிபொருள் தேவையை உள்நாட்டில் சுத்திகரிக்கும் நோக்கத்துடன் தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கும் சாத்தியவளக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, புதிய சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், 2026ம் ஆண்டுக்குள் புதிய சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகளும் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ) எரிபொருள் களஞ்சியத் திறனை விரிவாக்கம் செய்தல்

குணிசமான களஞ்சிய வசதிகள் இன்மையால் குறிப்பிடத்தகளவில் தொகை கையிருப்பை பேணமுடியாதுள்ளது. இதனால் ஏற்படும் ஆபத்தினை குறைக்குமுகமாக, பெற்றோலிய களஞ்சிய வசதிகளை விரிவாக்கம் செய்து நாளாந்த பேற்றோலிய கேள்வியை பூர்த்திசெய்யக்கூடியவகையில் 30 நாட்களுக்கு தேவையான தொகை கையிருப்பை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந் நோக்கத்தை அடைவதற்காக, 93000 கனமீற்றர் கொள்ளளவு கொண்ட 09 தாங்கிகளை நிர்மாணிப்பதற்கும், தற்போதுள்ள எரிபொருள் தாங்கிகளை பழுதுபார்ப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், திருகோணமலை எரிபொருள் தாங்கி வளாகத்தின் அபிவிருத்திப் பணிகளை துரிதமாக பூர்த்தி செய்வதன் மூலம் மீண்டும் அவ் தாங்கப் பண்ணை வளாகத்தை எரிபொருள் சேமிப்புக்காகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

(ஈ) எரிபொருள் குழாய் முறைமைகளை அபிவிருத்தி செய்தல்

குறைந்த செலவில் குழாய்கள் ஊடாக எரிபொருட்கள் அதிக வினைத்திறனுடன் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. அத்துடன், குழாய்கள் ஊடாக எரிபொருட்கள் கொள்கலனில் இருந்து பிரதான முனையம், சுத்தகரிபபு நிலையத்திற்கும் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து களஞ்சிய முனையத்திற்கும் எரிபொருள் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. மேலும், சிறு அளவில் மின்சார உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் குழாய்கள் மூலம் பரிமாற்றம் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

40,000 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட கொள்கலன் தாங்கியில் இருந்து. குழாய்கள் மூலமான எரிபொருள் இறக்குமதி செயற்பாடுகளை செயற்திறன் வாயந்ததாக விருத்தி செய்வதன் மூலம் நீண்ட காலத்தில் எரிபொருள் இறக்குமதியை 4 நாட்களில்

இருந்து 03 நாட்களுக்கும் பின்பு 02 நாட்களுக்கும் குறைக்க முடியும்.

மேலும், முத்துராஜவெலவில் இருந்து கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் வரையிலான 22 கிலோமீற்றர் நீளத்திற்கு விமான எரிபொருள் கொண்டு செல்வதற்காக குழாயை நிர்மாணித்தல், முத்துராஜவெல வளாகத்தில் விமான எரிபொருள் சேமிப்பு வளாகத்தை நிர்மாணித்தல், போன்றவற்றின் மூலம் செயற்திறனுடன் கேள்விக்கேற்ற விமான எரிபொருளை வழங்குவதற்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக் முன்மொழியப்பட்ட கெரவலப்பிட்டிய மீளவாயுவாக்கல் (re-gasification) பகுதியில் இருந்து களனிதிஸ்ஸ மின்சார நிலையத்திற்கான இயற்கை வாயுவை கொண்டு செல்லும் குழாய்த் தொகுதியை "நிர்மாணித்தல், உரிமப்படுத்துதல், இயக்குதல் மற்றும் பரிமாற்றம செய்தல்" (BOOT) வர்த்தக மாதிரியின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்குள் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(உ) உள்நாட்டு சக்தி வளக் கலவையில் உயிர் வாயு மற்றும் பசுமை ஹைட்ரஜனை அறிமுகப்படுத்துதல்

குறைந்தபட்ச பாதகமான சுற்றுச்சூழல் தாக்கத்துடன், நாட்டின் அபிவிருத்திக்கு முன்நிபந்தனையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதன் நோக்கத்தை மனதில் கொண்டு, இலங்கையின் சக்திவளக் கலவையில் உயிர் வாயு எரிபொருள் (bio fuel) மற்றும் பசுமை ஹைட்ரஜன் போன்ற சக்தி வளங்களின் பங்களிப்பை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது, இதற்கான தொழில்நுட்ப ஆய்வுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2.4 எதிர்கொள்ளப்பட்ட பிராதான சவால்கள்

"நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்திற்கிணங்கவும் இதற்கு வலுச்சேர்க்குமுகமாகவும் 2021 ஆம் ஆண்டில் வலுசக்தி அமைச்சு பலவேறு நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்தியது. கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் கோவிட் -19 வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்ட பல்வேறு பயணக்கட்டுப்பாடுகள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவாக சமூக மற்றும் பொருளாதாரத்திற்திற்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது மட்டுமல்லாமல் எதிர்பார்த்ததன்படி பல்வேறு திட்டங்களையும் அமுல்படுத்தமுடியாமல் போய்விட்டது.

- பெற்றோலிய அகழ்விற்கான முதலீட்டாளர்களை கவர்வதற்கான நிறுவனத்தின் கட்டமைப்புத் திறன் மற்றும் தற்போதுள்ள சட்டங்கள் போதாமையாக உள்ளது.

- சக்தி வளப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் குறைந்த செலவில் சக்தி வளத்தை வழங்குவதற்கும் தற்போதுள்ள உட்கட்டுமான வசதிகள் போதாமையாக உள்ளதுடன் இதனை நிவர்த்தி செய்வதற்கு பாரிய முதலீடுகள் அவசியமாக உள்ளது.

- பொது திறைசேரியால் தீர்மானிக்கப்படும் எரிபொருளின் விற்பனை விலை மற்றும் இறக்குமதி வரிகள் மற்றும் எரிபொருள் இறக்குமதி செலவுகள் மற்றும் பிற நிதி செலவுகளை ஈடுகட்டும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இச் செலவினங்களுக்கு விகிதாசாரமாக விற்பனை விலையை நிர்ணயிக்க இயலாமை காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

- எரிபொருள் இறக்குமதிக்காக அதிகளவு அந்நியச் செலாவணிச் செலவினம் ஏற்படுவதாலும், நாட்டிலுள்ள அந்நியச் செலாவணியின் நிலையான தன்மையைப் பேணுவதற்கும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இவற்றுக்கான வட்டி உட்பட டொலர் கடன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் டொலர் கடன் 3.7 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

- கோவிட் தொற்றுநோய்க்கு முன்னர், இலங்கையில் முன்னர் நிலவிய திருப்திகரமான வெளிநாட்டு விவகார செயற்பாட்டின் கீழ் கோரப்பட்ட கணிசமான கேள்வி மனுக்களின் பங்குபற்றுதலின் அடிப்படையில், 30 நாட்கள் அல்லது 90 மற்றும் 180 நாட்களுக்கு வட்டியில்லா கடன் வசதிகளுடன் எரிபொருள் கொள்வனவுகள் தடையின்றி மேற்கொள்ளப்படக்கூடியதாக இருந்-தது. எவ்வாறாயினும், நாட்டினுள் உள்வரும் அன்னியச் செலாவணி வரையறுக்கப்பட்டுள்ளதன் காரணமாக, இந் நெருக்கடி நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் வகையில் சில கேள்வி மனுக்கள் கோரப்பட்டன. ஆனால், இதற்கு எந்தவொரு கேள்வி மனுதாராரும் செவிசாய்க்கவில்லை. இதன் மிகவும் பாரதூரமான விளைவுகள் 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் எதிர்வேண்டியேற்பட்டுள்ளது. மேலும், வரையறுக்கப்பட்ட கேள்வி மனுதாராரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வி மனுக்களும் பதிவு செய்யப்படும் போது குறிப்பிட்ட நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளில் இருந்து மாறுபட்டு காணப்படுவதோடு பெறுகை வழிகாட்டுதல்களில் இருந்து விலகிக் காணப்படுகின்றது. இவற்றைத் தவிர, கேள்வி மனுதாரர்கள் உத்தரவாதக் கட்டணங்கள் இல்லாது கேள்வி மனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஊக்குவிப்பதோடு கேள்வி மனு ஆவணத்தில் குறிப்பிடப்படாத கொடுப்பனவு விதிமுறைகளை உட்புகுத்தியும் மொத்தமாக முற்றிலும் மாறுபட்ட கேள்வி மனுக்களை சமர்ப்பிக்கின்றனர். இவ் அசாதாரண நிலைமைகளின் நாட்டின் எரிபொருள் தேவையை பூர்த்திசெய்வதென்பது மிகுந்த சவால்மிக்க தொன்றகவே காணப்படுகின்றது.



.....

எம் பி டி யூ கே மாபா பத்திரன
செயலாளர்/பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

M P D U K Mapa Pathirana
Secretary
Ministry of Power & Energy
Sir Ernest De Silva Mawatha,
Colombo 07.

அத்தியாயம் 03

வருடத்திற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை

அறிக்கையிடல் அடிப்படைகள்

01

அறிக்கையிடல் காலப்பகுதி

இவ் நிதிக் கூற்றுக்களின் அறிக்கையிடல் காலப்பகுதி 2021 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஆகும்.

02

மதிப்பீட்டு அடிப்படைகள்

சில சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்தும் மற்றும் காசு அடிப்படையில் மாற்றப்பட்டும் அல்லாதவிடத்து குறிப்பிடப்பட்டும் வரலாற்று செலவினத்திற்கு மாற்றப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

நிதிக் கூற்றின் பெறுமதிகள் மட்டந்தட்டப்பட்ட கிட்டிய பெறுமதியான இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது.

03

வருமானங்களை அடையாளம் காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் வரியிடல் காலப்குதியினைத் தவிர்த்து காசுப் பெறுவனவாகக் கருதப்படும்.

04

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை

அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்
நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகளை தரக்கூடியவை என அடையாளம் காணப்பட்ட சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றன உள்வாங்கப்படுவதோடு இச் சொத்துக்களின் பெறுமதிகள் நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யப்படும்.

செலவின மாதிரி பொருந்தாதவிடத்து சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அதன் ஆரம்ப பெறுமதி அடிப்படையில் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

05

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கங்கள்

மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள், சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கணக்கோடு தொடர்புபட்டவையாகும்.

06

காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று கையிலுள்ள உள்நாட்டு நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் போன்றன காசு மற்றும் காசுக்கு சமனானவைகளாக உள்ளடக்கப்படும்

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ –எப

2021 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

வ. செ. திட்டம் (நடப்பு ஆண்டு) (2021)		குறிப்பு	உண்மையான நடப்பு ஆண்டு (2021)	உண்மையான முன்னைய ஆண்டு (2020)	
162,000,000	**வருமான பெறுகைகள்**		225,267,081	113,595,168	
-	வருமான வரி	1	-	-	
	உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி	2	-	-	
-	சர்வதே வர்த்தகம் மீதான வரி	3	-	-	ஏசீஏ - 1
162,000,000	வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	225,267,081	113,595,168	
162,000,000	**மொத்த வருமான பெறுகைகள் (அ)**		**225,267,081**	**113,595,168**	
	வருமானமல்லாத பெறுகைகள்				
	திறைசேரி முற்பணம்		28,310,000	38,000,000	ஏசீஏ - 3
	வைப்புகள்		3,435,250	3,099,851	ஏசீஏ - 4
2,400,000	முற்பணக் கணக்குகள்		4,911,892	12,796,742	ஏசீஏ - 5
	வேறு பெறுகைகள்		-	-	
2,400,000	**மொத்த வருமல்லாத பெறுகைகள் (ஆ)**		**36,657,142**	**53,896,593**	
164,400,000	**மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமல்லாத பெறுகைகள் இஸீ (அ) + (ஆ)**		**261,924,223**	**167,491,761**	
-	**திறைசேரிக்கான அனுப்பீடுகள் (ஈ)**		29,911,362	4,430,716	
164,400,000	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவுஉ=(இ)-(ஈ)**		**232,012,861**	**163,061,045**	
	கழி: செலவினம்				
	மீண்டெழும் செலவினம்				
66,561,000	வேதனாதிகள்,சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள	5	66,259,658	51,290,409	
70,579,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	68,189,485	47,190,363	ஏசீஏ - 2(ii)
72,760,000	மானியமங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	72,545,678	65,180,537	
	வட்டிக் கொடுப்பனவுகள்	8			
	ஏனைய மீண்டெழும் செலவினம்	9			
209,900,000	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)**		**206,994,821**	**163,661,309**	
	மூலதனச் செலிவினம்				
18,096,017	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	17,437,443	-	

3,013,300	மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல்	11	2,739,756	1,857,004	ஏசீஏ - 2(ii)
40,000,000	மூலதன மாற்றல்கள்	12	-	218,000	
-	நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல்	13	-	-	
425,000	மனித வள அபிவிருத்தி	14	405,000	552,400	
2,400,000	ஏனைய மூலதனச் செலவுகள்	15			
63,934,317	**மொத்த மூலதனச் செலவினம்(எ)**		**20,582,199**	**2,627,404**	
	வைப்புக்கள் கொடுப்பனவுகள்		3,727,262	3,038,570	ஏசீஏ - 4
3,000,000	**முற்பணக் கொடுப்பனவுகள்**		3,584,157	24,519,548	ஏசீஏ - 5
	பிரதான பேரேட்டு செலவுகள்(ஏ)		**7,311,419**	**27,558,118**	
	மொத்தச் செலவினம் ஐ ஸ்ரீ (ஊ + எ + ஏ)		**234,888,439**	**193,846,831**	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஒ = (உ–ஐ)		**(2,875,578)**	**(30,785,786)**	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின் படி மீதி		**(2,875,578)**	**(30,785,786)**	ஏசீஏ - 7
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ - 3

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ –பீ

2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	உண்மையான	
		நடப்பு ஆண்டு	முனனைய ஆண்டு
		2021	2020
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து, பொறித் தொகுதி உபகரணம்	ஏசீஏ - 6	297,682,316	292,942,595
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்			
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ - 5/5(அ)	10,456,425	11,784,160
மொத்த சொத்துக்கள்	ஏசீஏ - 3		
நடமுறை பொறுப்புக்கள்	ஏசீஏ - 5(ஆ)	297,682,316	292,942,595
வைப்புக் கணக்கு			
முற்பண மீதி	ஏசீஏ - 4		
மொத்த பொறுப்புக்கள்	ஏசீஏ - 3	2,637	294,648
வுழுவயட டுயைடிடைவைநைள		**308,138,741**	**304,726,756**

இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு அலுவலர்	கணக்கீட்டு அலுவலர்	பிரதான நிதி அலுவலர்
அலுவலர் :	அலுவலர் :	அலுவலர் :
பெயர் :	பதவி :	பதவி :
திகதி :	திகதி :	திகதி :
M P D U K Mapa Pathirana Secretary Ministry of Power & Energy Sir Ernest De Silva Mawatha, Colombo 07.	M P D U K Mapa Pathirana Secretary Ministry of Power & Energy Sir Ernest De Silva Mawatha, Colombo 07.	N. G. Ira Jinasena Chief Financial Officer Ministry of Energy No. 80, Sir Ernest De Silva Mw: Colombo 07.

2021 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

	உண்மையான	
	நடப்பு ஆண்டு	முனனைய ஆண்டு
	2021	2020
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்		
மொத்த வரி பெறுகைகள்	-	-
கட்டணம், அபராதம், தண்டப் பணம், உரிமங்கள்	230,096,870	46,856,055
இலாபங்கள்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய செலவின தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	3,089,706	979,406
கிடைக்கப்பெற்ற கட்டு நிதி	28,310,000	38,297,067
முற்பணங்களை அறவிடுதல்	3,113,990	1,824,649
வைப்புக்களின் பெறுகை	3,435,250	1,853,830
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சல் (அ)	**268,045,817**	**89,811,007**
கழி – காசு செலவிடல்:		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	139,227,804	49,878,954
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	72,550,956	29,731,379
ஏனைய தலைப்புக்களின் செலவினங்கள்	-	295,967
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம்	29,911,362	4,430,716
முற்பணக் கொடுப்பனவு	2,022,233	1,823,802
வைப்புக் கொடுப்பனவு	3,727,262	2,055,771
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சல் (ஆ)	**247,439,617**	**88,216,589**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**20,606,199**	**1,594,418**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தகாசு		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை	-	-
கடன் அறவீடுகள்	-	-
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (ஈ)		
கழி – காசு செலவிடல்:		
பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மாணம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்தல்	**20,606,199**	**1,594,418**
முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**20,606,199**	**1,594,418**
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு (ஊ)=(ஈ)-(உ)	**(20,606,199)**	**(1,594,418)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)=(இ) + (ஊ)	-	-
நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்		
உள்நாட்டு கடன்பெறுகை	-	-

வெளிநாட்டு கடன்பெறுகை	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஏ)	-	-
கழி – காசு செலவிடல்:	-	-
உள்நாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு	-	-
வெளிநாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு	-	-
நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)	-	-
நிதி செயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) – (ஒ)	-	-
ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

ஏசீஏ -1

2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

செலவின தலைப்பு இல : 115 அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர் : செயலாளர்

ரூபா

செலவினக் குறியீடு	வருமானத் தலைப்பு	வருமான மதிப்பீடு		வருமானத்தைத் திரட்டுதல்				தேறிய விளைவு			
		(1)		(2)			(3)	(4)			(5)
		மூல மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது	ஏனைய அமைச்சினால்/ திணைக்களத்தினால் திரட்டப்பட்டது (அட்டவணை 66/SA-21	மொத்தம்	நிலுவை வருமானங்களை திரட்டுதல்	காசாக	தவறுகளைத் திருத்துதல்	மொத்தம்	தேறிய வருமானம்
			1(ii)	2(i)	2(ii)	2(iii)= 2(i)+2(ii)	(3)	4 (i)	4 (ii)	4(iii)=4(i)+ 4(ii)	5=2(iii)+ (3)-4(iii)
2003.02.21	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்										
	பெற்றோலிய கைத்தொழில் அமைச்சுக்குரிய கட்டணங்கள்	130,000,000	162,000,000	225,267,081		225,267,081		-		-	225,267,081
	மொத்த முழு வருமானம்	130,000,000	162,000,000	225,267,081	-	225,267,081	-	-	-	-	225,267,081

ஏசீஏ –2(ii)

2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல: 115

அமைச்சின் பெயர் : வலுசக்தி அமைச்சு

ரூ.

செலவினக் குறியீடு	ஏற்பாடுகள்					செலவினம்			தேறிய விளைவு		
	நிதியிடல் (குறியீட்டு இல.)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66%69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஏற்பாடு	காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/ திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் மூ சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
		(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/ (4)*100	
மீண்டுவரும் செலவினம்											
நிகழ்ச்சித் திட்டம் (1)	11										
01- அமைச்சர் அலுவலகம்											
குறிப்பு - 5 - கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீதியான வகுப்பீடு											
ஆளுக்குரிய வேதனங்கள											
1001 சம்பளமும் கூலியும்		7,800,000.00	-	2,718,000.00	10,518,000.00	10,501,676.28	-	10,501,676.28	16,323.72	0.16	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்		2,000,000.00	-	415,000.00	2,415,000.00	2,411,333.36	-	2,411,333.36	3,666.64	0.15	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும

1003 ஏனைய கொடுப்பனவுகள்		3,500,000.00	-	(270,000)	3,230,000.00	3,228,493.55	-	3,228,493.55	1,506.45	0.05	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
குறிப்பு - 6 - செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்											
பிரயாணச் செலவினம்											
1101 உள்ளூர		2,000,000.00	-	150,000.00	2,150,000.00	2,139,364.00	-	2,139,364.00	10,636.00	0.49	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1102 வெளிநாடு		500,000.00	1,200,000.00	920,000.00	2,620,000.00	1,419,168.35	-	1,419,168.35	1,200,831.65	45.83	குறிப்பு இல..01
மொத்தம் (அ)		15,800,000.00	1,200,000.00	3,933,000.00	20,933,000.00	19,700,035.54	-	19,700,035.54	1,232,964.46	5.89	
வழங்கல்கள்											
1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்		1,000,000.00	-	-	1,000,000.00	943,185.20		943,185.20	56,814.80	5.68	குறிப்பு இல..02
1202 – எரிபொருள்		4,800,000.00		(350,000)	4,450,000.00	4,430,807.43	-	4,430,807.43	19,192.57	0.43	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1203 உணவும் சீருடைகளும்		100,000.00		(100,000)	-	-	-	-	-	0	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1205 ஏனையவை		650,000.00		(100,000)	550,000.00	550,000.00	-	550,000.00	-	0	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
மொத்தம் (ஆ)		**6,550,000.00**	**-**	**(550,000)**	**6,000,000.00**	**5,923,992.63**	-	**5,923,992.63**	**76,007.37**	**1.28**	
பராமரிப்புச் செலவினங்கள்											
1301 வாகனங்கள்		3,500,000.00	200,000.00	1,563,000.00	5,263,000.00	5,261,728.50	-	5,261,728.50	1,271.50	0.02	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும

1302 பொறி, இயந்திரம், உபகரணம்		200,000.00	-	(50,000)	150,000.00	148,665.19	-	148,665.19	1,334.81	0.89	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்		250,000.00	-	(240,000)	10,000.00	9,988.00	-	9,988.00	12	0.12	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
மொத்தம் (இ)		**3,950,000.00**	**200,000.00**	**1,273,000.00**	**5,423,000.00**	**5,420,381.69**	**-**	**5,420,381.69**	**2,618.31**	**1.03**	
சேவைகள்											
1401 போக்குவரத்து		-			-			-	-		
1402 தபால், தொலைத்தொடர்பு		1,000,000.00	-	400,000.00	1,400,000.00	1,379,526.31	-	1,379,526.31	20,473.69	1.46	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1403 மின்சாரமும் நீரும்		1,000,000.00	-	(200,000)	800,000.00	774,050.07	-	774,050.07	25,949.93	3.24	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1404 வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்		500,000.00	-	3,445,000.00	3,945,000.00	3,944,186.76	-	3,944,186.76	813.24	0.02	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1409 ஏனையவை		1,200,000.00	-	(270,000)	930,000.00	924,737.10	-	924,737.10	5,262.90	0.57	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
மொத்தம் (ஈ)		**3,700,000.00**	**-**	**3,375,000.00**	**7,075,000.00**	**7,022,500.24**	**-**	**7,022,500.24**	**52,499.76**	**0.74**	
ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் (அ+ஆ+இ+ஈ)		**30,000,000.00**	**1,400,000.00**	**8,031,000.00**	**39,431,000.00**	**38,066,910.10**	**-**	**38,066,910.10**	**1,364,089.90**	**3.46**	
குறிப்பு - 7 - செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள்											

மாற்றங்கள்											
1502 ஒய்வூதிய பணிக்கொடைகள்		1,000,000.00	-	(50,000)	950,000.00	949,266.75		949,266.75	733.25	0.08	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
1506 அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி		-	-	-	-	-	-	-	-	-	
மொத்தம்		**1,000,000.00**	**-**	**(50,000)**	**950,000.00**	**949,266.75**	**-**	**949,266.75**	**733.25**	**0.08**	
குறிப்பு - 8 - செலவு விடயரீதியான வட்டிக் கொடுப்பனவுகள்											
1601 உள்ளூர்க் கடன்கள்		-	-	-	-	-	-	-	-	-	
மொத்தம்		-	-	-	-	-	-	-	-	-	
குறிப்பு - 9 - செலவு விடயரீதியான ஏனைய மீண்டுவரும் செலவினம்											
1701 நட்டங்களும் பதிவழிப்பும் நிகழத்தக்க சேவைகள்		-	-	-	-	-	-	-	-	-	
மொத்தம்		-	-	-	-	-	-	-	-		
நிகழ்ச்சித் திட்டம் (1)											
முழு மொத்தம் (குறிப்பு 5 முதல் 9 வரை) மொத்த மீண்டுவரும் செலவினம்		31,000,000.00	1,400,000.00	7,981,000.00	40,381,000.00	39,016,176.85	-	39,016,176.85	1,364,823.15	3.54	
மூலதனம் செலவினம்											
நிகழ்ச்சித் திட்டம் (1)											
பொது முதலீடுகளின் செலவு விடயரீதியான வகுப்பீடு											
குறிப்பு - 10 முலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்											

2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்		100,000.00	12,984,317.00		13,084,317.00	13,015,498.00	-	13,015,498.00	68,819.00	0.53	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
2002 பொறி, இயந்திரம், உபகரணம்		-	-	-	-	-	-	-	-	0	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
2003 வாகனங்கள்		2,000,000.00		-	2,000,000.00	1,410,255.27	-	1,410,255.27	589,744.73	29.49	குறிப்பு இல.03
மொத்தம் (அ)		**2,100,000.00**	**12,984,317.00**	**-**	**15,084,317.00**	**14,425,753.27**	**-**	**14,425,753.27**	**658,563.73**	**4.37**	
குறிப்பு - 11 மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு											
2101 வாகனங்கள்		-	-	-	-	-	-	-	-		
2102 தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்		1,400,000.00	-	-	1,400,000.00	1,332,951.20		1,332,951.20	67,048.80	4.79	நிகர ஒதுக்கத்தில் சேமிப்பு 5% தத்தை விட குறைவாகும
2103 பொறி, இயந்திரம், உபகரணம்		300,000.00			300,000.00	235,000.00		235,000.00	65,000.00	21.67	குறிப்பு இல.04
மொத்தம் (ஆ)		**1,700,000.00**	**-**	**-**	**1,700,000.00**	**1,567,951.20**	**-**	**1,567,951.20**	**132,048.80**	**7.77**	
குறிப்பு -12 மூலதன மாற்றங்கள்											
2202 அபிவிருத்தி உதவிகள்		-			-			-	-		
மொத்தம் (இ)		-	-	-	-	-	-	-	-		
குறிப்பு - 13 நிதிச் சொத்துக்களின் கொள்வனவு											
2301 உரிமைப் பங்குக்கான பங்களிப்பு		-	-	-	-	-	-	-	-	-	
மொத்தம் (ஈ)											

குறிப்பு – 14 மனித வள அபிவிருத்தி											
2401 பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்		-	-	-	-	-	-	-	-	-	
மொத்தம் (உ)											
குறிப்பு – 15 ஏனைய மூலதனச் செலவினங்கள்											
2509 ஏனையவை		-	-	-	-	-	-	-	-	-	
மொத்தம் (ஊ)											
நிகழ்ச்சித் திட்டம் (1)											
பொது முதலீட்டின் மீதான மொத்தச் செலவினங்கள் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ)		3,800,000.00	12,984,317.00	-	16,784,317.00	15,993,704.47	-	15,993,704.47	790,612.53	4.71	
முழு மொத்தம் (குறிப்பு 5 – 15)		**34,800,000.00**	**14,384,317.00**	**7,981,000.00**	**57,165,317.00**	**55,009,881.32**	**-**	**55,009,881.32**	**2,155,435.68**	**3.77**	

குறிப்பு:

1. தவிர்க்க முடியாத காரணத்தால் 02 வெளிநாட்டு நிகழ்ச்சிகள்.. மாநாடுகளில் கௌரவ. அமைச்சர் பங்குபற்றவில்லை

2. நாட்டில் நிலவிய கோவிட்-19 நோய்தொற்று காரணமாக அமைச்சு கிரமமாக செயற்படவில்லை. அத்துடன் நிதியானது சிக்கனமாக பயன்படுத்தப்பட்டதால் காகிதாதிகளின் செலவினம் குறைந்துள்ளதோடு காரியாலய செலவினமும் குறைவடைந்துள்ளது

3. வாகன இறக்குமதிகள் வரையறுக்கப்பட்டதால், 5 வருடத்திற்கு மேலான பழமைவாயந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. ஏவ்வாறாயினும், கோவிட்-19 நோய்தொற்று காரணமாக இப் பணிகள் பூர்த்திசெய்யப்படவில்லை

